**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**<u>முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.</u>**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 03-ம் நாள் வியாழக்கிழமை

**<u>IA NO.1069/2023</u>**

**In**

**<u>O.S No.87/2017</u>**

மன்சூர் அலி .....**மனுதாரர்/உத்தேச 4 ம் பிரதிவாதி**

**//எதிர்//**

1) சித்திரைவேல்

2) ராமையா

3) சுப்ரமணியன்-(பொதுக்குடும்ப உறுப்பினர் என்ற முறையில்) .....**எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/உத்தேச 4ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கை.வீரமணி.,M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.இராஜேந்திரன்.,M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் மனுதாரர்/உத்தேச 4ம் பிரதிவாதி தரப்பில் கட்டளை 1 விதி 10(2)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

இந்த அசல் வழக்கானது உரிமைவிளம்பல் மற்றும் நிரந்தரதடையாணை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணைக்கான மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரிய மனு I.A.756/2022 நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளவை செய்வதற்காக வழக்குச் சொத்தில் ஆஜராகியபொழுதுதான் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விபரம் மனுதாரருக்கு தெரியவந்தது. இந்த நம்பர் வழக்கு சொத்து மனுதாரருக்கு சொந்தமான சொத்தாகும். இந்த நம்பர் வழக்கில் இதில் கண்ட எதிர்மனுதார்கள்/வாதிகள் மனுதாரரை தரப்பினராக வேண்டுமென்றே சேர்க்காமல் மனுதாரர் சகோதரர் தாஜீதீனை மட்டும் 1-ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர் கடந்த 2007-ம் ஆண்டு முதல் 2022-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை சிங்கப்பூர் நாட்டிற்கு வேலைக்கு சென்று விட்டதால் மேற்படி வழக்கு நடந்த விபரம் அவருக்கு தெரியாமல் போய்விட்டது. தற்போது மனுதாரர் சொந்த ஊருக்கு திரும்பவந்த பிறகுதான் மேற்படி வழக்கு சொத்தினை நீதிமன்ற ஆணையர் அளவை செய்யவந்தபோதுதான் மேற்படி விபரம் அவருக்கு தெரியவந்தது. மேற்படி வழக்கு சொத்து தற்போது அவரது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது. எனவே மனுதாரரை உத்தேச 4 ம் பிரதிவாதியாக வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1,3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மேற்படி நம்பர் அசல் வழக்குசொத்தில் மனுதாரர் /உத்தேச 4-ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும், அனுபோகமும் ஒருபோதும் இல்லை. அவ்வாறான நிலையில் அசல் வழக்கில் மனுதாரர் /உத்தேச 4-ம் பிரதிவாதியாக சேர்க்ககோரி இந்த நம்பர் மனுவினை தாக்கல் செய்துகொள்வதற்கு மனுதாரர உத்தேச 4-ம்பிரதிவாதிக்கு யாதொரு உரிமையும் சட்டபடி இல்லை. அவ்வாறான நிலையில் மனுபிரமாணப்பத்திரிக்கையில் வழக்குசொத்து மனுதாரர்/உத்தேச 4-ம் பிரதிவாதிக்கு சொந்தமானசொத்து என தெரிவிக்கப்பட்டிருப்பது தவறானதாகும். மேற்படி நம்பர் அசல் வழக்கிற்கு மனுதாரர்/உத்தேச 4 ம்பிரதிவாதி எவ்விதத்திலும் அவசியதரப்பின இல்லை. அதனால் அசல் வழக்கில் மனுதாரர் உத்தேச 4-ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்கவேண்டிய அவசியம் ஏதும் எதிர்மனுதாரர்கள் /வாதிகளுக்கு எழுவில்லை. அதனால் அசல் வழக்கில் மனுதா உத்தேச 4-ம்பிரதிவாதியை தரப்பினராக எதிர்மனுதாரர்கள் / வாதிகளால் சேர்க்கப்படவில்லை. அவ்வாறான நிலையில்

மனுதாரர் / உத்தேச 4-ம் பிரதிவாதியை எதிர்மனுதாரர்கள் /வாதிகள் தரப்பினராக வேண்டுமென்றே சேர்க்கவில்லை என தெரிவித்திருப்பது பொய்யானதாகும். மேற்படி நம்பர் அசல் வழக்கினை தாக்கல் செய்த காலத்திலிருந்தே அதுவிவரம் மனுதாரர் / உத்தேச 4 ம் பிரதிவாதிக்கு நன்கு தெரியும். அவ்வாறிருந்தும் மனுதாரர்/உத்தேச 4-ம் பிரதிவாதி 2007-ம் ஆண்டு முதல் 2022-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை சிங்கப்பூர் நாட்டிற்கு வேலைக்கு சென்று விட்டதால் அசல் வழக்கு மனுதாரர்/உத்தேச 4- பிரதிவாதிக்கு தெரியாமல் போய்விட்டதாகவும் தற்போது சொந்த ஊருக்கு வந்தபோதுதான் வழக்கு சொத்தினை நீதிமன்ற ஆணையர் அளவை செய்தபோது வழக்கு விவரம் தெரிய வந்துள்ளதாகவும், மனுபிரமாணப்பத்திரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது அப்பட்டமான பொய்கள் ஆகும். 1-ம்பிரதிவாதி மனுதாரர்/உத்தேச 4-ம் பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரர் ஆவார். அதனால் 1-ம் பிரதிவாதியின் தூண்டுதல் காரணமாக இந்த நம்பர் மனுவினை மனுதாரர்/உத்தேச 4 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு மனுவினை தாக்கல் செய்வதன் மூலம் மேற்படி நம்பர் அசல் வழக்கில் தீர்ப்பு ஏற்படுவதை எப்படியேனும் காலம்கடத்திக் கொண்டுவிடலாம் என்ற கெட்ட நோக்கத்தில் 1-ம் பிரதிவாதியின் தூண்டுதலுக்குட்பட்டு மனுதாரர்/உத்தேச 4-ம் பிரதிவாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுபிரமாணப்பத்திரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதிகளை நிரூபிப்பதற்குரிய ஆவணங்கள் எதனையும் மனுதாரர்/உத்தேச 4-ம் பிரதிவாதியால் றுவுடன் தாக்கல்செய்யப்பட்டிருக்கவில்லை. அதிலிருந்தே மனு பிரமாணப்பத்திரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மைக்கு புறம்பானவைகள் சட்டப்படிக்கு ஏற்புடையவகள் இல்லை எனவும், எனவே மனுதாரரின் இந்த மனுவை எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி யாதெனில் இம்ம அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது உத்தேச 4 ம் பிரதிவாதியால் தன்னை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று கண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தனது மனுவில் தாவா வழக்கு விபரம் நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்ட போது தான் தெரிய வந்ததாகவும் மனுதாரரை தரப்பினராக சேர்க்காமல் அவரது சகோதரர் தாஜூதினை மற்றும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் தாவா சொத்து மனுதாரரின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருப்பதால் அவருக்கு

வழக்கில் வெற்றிபெறக் கூடிய நல்ல கட்சி இருப்பதால் மனுதாரரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் மனுதாரரை தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை நிரூபிப்பதற்குரிய ஆவணங்கள் எதையும் மனுதாரர் உத்தேச 4ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்படவில்லை எனவும், அதிலிருந்து மனு சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை சட்டப்படி ஏற்புடையதல்ல என்பதை நன்கு தெளிவாகிறது என்பதால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

தாவா வழக்கானது வாதியால் உரிமைவிளம்பல் மற்றும் அதனை தொடர்ந்த நிரந்தரதடையாணை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மனுதாரரின் சகோதரர் தாஜூதின் என்பவர் 1ம் பிரதிவாதியாக காட்டப்பட்டுள்ளார். 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் தோன்றா தரப்பினராக கருதப்பட்டு மீண்டும் அவர் தனக்கு எதிரான ஒருதலைபட்ச உத்தரவை ரூ.750/- செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு மேற்படி செலவுத்தொகையை 1ம் பிரதிவாதி செலுத்தி வைக்கவில்லை. இந்நிலையில் தாவா சொத்து தனது சுவாதீனத்தில் இருப்பதாக 1ம் பிரதிவாதியின் சகோதரரான மனுதாரர் இந்த மனுவை தன்னை வழக்கில் உத்தேச 4ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டும் என்று கோரி தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் அவரது எதிருரை ஆட்சேபணையில் குறிப்பிட்டுள்ளவாறு தாவா சொத்து மனுதாரரின் சுவாதினத்தில் இருப்பதற்குரிய ஆவணங்கள் எதுவும் மனுதாரரால் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும் தாவா சொத்து யாருடைய சுவாதீனத்தில் இருக்கிறது என்பது முழுமையான விசாரணைக்கு பின்பே தெரியவரும். தாவா சொத்தின் மீது மனுதாரர் தனக்கும் உரிமை மற்றும் சுவாதீனம் உள்ளது என்று கட்சி செய்துள்ளதால் தாவா வழக்கின் வழக்கெழு வினாவை தீர்மானிப்பதில் மனுதாரர் அவசியமான தரப்பினர் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 03-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**
**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை
**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி**: இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

**//உண்மை நகல்//**

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
**I.A.No. 1069/2023**
**O.S.No. 87/2017**
**நாள் 01.10.2024**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**